DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.100/2022**

| | | | |
|---|---|---|---|
| Name | : | கர்ணன் | **Rw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of October 2023.

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது குருவிகுளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன். இந்த விபத்து வழக்கு சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கையும், குற்றப்பத்திரிக்கையையும் ஆட்டோ ஓட்டுநர் சங்கர் என்பவர் மீது தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். இந்த விபத்து வழக்கு சம்பந்தப்பட்ட குற்றப்பத்திரிக்கை, 2 வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், விபத்துப்பதிவேடு ஆகியவற்றைத் தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.1 ஆகும். டிஎன் 79 ஜே 6176 வாகனத்தின் மீது எந்த தவறும் இல்லை. அந்த வாகனம் இந்த விபத்திற்கு எந்த காரணமும் இல்லை. ஆட்டோ ஓட்டுநர் சங்கர் 02.12.2021ல் குற்றத்தை ஒப்புக்கொண்டு ரூ.2500/- சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியிருக்கிறார்.

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் சங்கருக்கும், சொக்கலிங்கம் என்பவருக்கு

காயங்கள் ஏற்பட்டதாகத்தான் துலங்கும் என்றால் அவ்வாறு புகார்தாரர் கூறியிருக்கிறார். ஸ்ரீராமுக்கு எந்த காயங்களும் இல்லை என்றால் சரிதான். ஸ்ரீராம் சிமெண்ட் லோடை ஆலங்குளம்–நாலுவாசன்கோட்டை மெயின் ரோட்டில் ஏற்றி கிழக்கில்இருந்து மேற்கு நோக்கி வரும்போது அவர் பின்னால் வந்த ஆட்டோ அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து மோதியிருக்கிறார். ஸ்ரீராமின் வண்டி முன்னால் செல்ல ஆட்டோ பின்னால் சென்றிருக்கிறது என்றால் சரிதான். ஸ்ரீராம் ஓட்டி வந்த வாகனத்தின் பின்னால் ஆட்டோ மோதியுள்ளது. 2 வாகனங்கள் விபத்தில் ஈடுபட்டதாக துலங்குகிறது. ஸ்ரீராம் முன்னால் வாகனத்தை ஓட்டி வந்ததால் பின்னால் ஆட்டோ எவ்வாறு வந்தது என்று அவருக்கு தெரியாது என்றால் சரியல்ல. விபத்து 20.07.2021 நண்பகல் 11 மணிக்கு நடந்திருக்கிறது. 21.07.2021ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நேரத்தில் சங்கர் சங்கரன்கோவில் மருத்துவமனையில் இருந்திருக்கிறார் என்றால் சரிதான். சொக்கலிங்கமும் அங்கு தான் இருந்திருக்கிறார் என்றால் சரிதான். ஆலங்குளம்–நாலுவாசன்கோட்டை மெயின் ரோட்டில் வளைவிற்கு முன்னால் இந்த விபத்து நடந்திருக்கிறது. வளைவு இருப்பதால் அங்கு வேகமாக வாகனத்தில் வர இயலாது என்றால் சரியல்ல. சங்கர் ஓட்டிச் சென்ற வாகனம் 3 சக்கர வாகனம் என்றால் சரிதான். ஆட்டோவில் 40 கி.மீ வேகத்திற்கு மேல் செல்ல இயலாது என்றால் சரியல்ல. சங்கர் சிகிச்சையில் இருந்ததால் ஸ்ரீராமிடம்இருந்து புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் சங்கர் ஆட்டோவை அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ ஓட்டிச் சென்றதாக துலங்காது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் ஸ்ரீராம் எந்த திசையில் இருந்து எந்த திசைக்கு சென்றுகொண்டிருந்தார் என்று துலங்காது என்றால் சரிதான். குற்றப்பத்திரிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீராம் தான் நேரில் வந்து காவல் நிலையத்தில் புகார்அளித்திருக்கிறார் என்றால் சரிதான். இந்த 2 வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டிருக்கிறது என்றால் சரிதான். ஸ்ரீராமின் வாகனத்தின் ஆய்வறிக்கையில் வலதுமுன்புறம் கதவு நெளிந்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. கதவு முழுவதும் சேதமடைந்ததாக இதில் கூறவில்லை. பின்புற இண்டிகேட்டர் லைட் சேதமடைந்ததாக கூறப்பட்டிருக்கிறது. முன்புறம் உள்ள இண்டிகேட்டர்

சேதமடைந்ததாக கூறவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் வாய்தா ஏற்பட்டுள்ளதால் நீதிமன்றத்தின் மூலமாகவே சங்கர் அபராதம்செலுத்தியிருக்கிறார். காவல் நிலையத்தில் தகவல் கூறித்தான்அவர் அபராதம் செலுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. விபத்தில் பொதுவாக தவறு இழைத்தவர்கள் தான் அபராதம் செலுத்த வேண்டும் என்றால்சரிதான். சங்கர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டவில்லை என்றும், அதனால் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஸ்ரீராம் மீது குற்ற வழக்கு பதிவு செய்யக்கூடாது என்பதற்காக சிகிச்சையில் இருந்த சங்கர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.10.18 17:40:15 +0530